# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1919 - 2015 ජූනි මස 12 වැනි සිකුරාදා - 2015.06.12

*1919 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 922 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 924 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 929 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2015, யூலை மாதம் 03 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2015, யூன் மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**டபிள்யூ. ஏ. ஏ. ஜீ. பொன்சேக்கா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2015 ஆம் ஆண்டு சனவரி மாதம் 22 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**காணி அமைச்சு**

*நிலஅளவைத் திணைக்களம்*

**பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் விற்பனைக்கான விலைமனுக் கோரல்**

இலங்கை நிலஅளவைத் திணைக்களத்துக்குரிய பாவனைக்கு உதவாது என சிபாரிசு செய்யப்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் விற்பனைக்காக விலைமனு கோரப்படுகிறது.

2. விலைமனுக் கோரல்களைச் சமர்ப்பிப்பதற்கான விலைமனுப் பத்திரத்தை கொழும்பு 5, கிருல வீதி, இல. 150 இல் அமைந்துள்ள சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் (பெறுகைகள் மற்றும் வழங்கல்கள்) இடமிருந்து பெற முடிவதுடன் 2015, யூலை மாதம் 3 ஆந் திகதி பி. ப. 3.00 மணிவரை அலுவலக நேரங்களில் குறித்த பொருட்களின் பட்டியல் மற்றும் பொருட்களைப் பார்வையிட முடியும். பொருட்கள் பார்வையிடல் சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் (நிர்வாகம்) மற்றும் சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகர் (பெறுகைகள் மற்றும் வழங்கல்கள்) அவர்களின் மேற்பார்வையின்கீழ் நடைபெறும்.

3. ஒவ்வொரு உருப்படிக்கும் தனித்தனியாக தயாரிக்கப்பட்ட விலைமனுப் பத்திரத்தைத் தபால் உறையில் இட்டு முத்திரையிட்டு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் “உருப்படி இலக்கம் ..........................” எனக் குறிப்பிட்டு, உருப்படி இலக்கம் ஒவ்வொன்றிற்காக மீளளிக்கப்படும் 1,000 ரூபா வைப்புத் தொகையை விலைக்கோரல் பிணை என இவ்வலுவலகத்தில் சிறாப்பரிடம் 2015, யூலை மாதம் 3 ஆந் திகதி பி. ப. 3.00 மணிக்கு முன் செலுத்திப் பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டின் பிரதியொன்றினை இணைத்து பற்றுச்சீட்டின் இலக்கத்தை விலைமனுப் பத்திரத்தில் குறிப்பிட்டு கீழ்க்காணும் விலைமனுக் கோரல் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நேரத்திற்கும் முன்னர் பதிவுத்தபாலில் கிடைக்கக்கூடியதாக மேற்காணும் முகவரிக்கு அனுப்ப முடியுமென்பதுடன் பெறுகைகள் மற்றும் வழங்கல்கள் கிளையில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியிலும் இடமுடியும்.

4. பொருட்கள் விற்பனையின்போது சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களுக்கு 11% பெறுமதி சேர் வரியும் உள்ளடக்கப்பட்டு அறவிடப்படும்.

5. விலைமனு ஏற்றுக்கொள்ளல் 2015, யூலை மாதம் 8 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு முடிவடைவதுடன், அத்தினமே மு. ப. 10.05 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்களோ அல்லது அவர்களது பிரதிநிதிகளோ அதில் கலந்துகொள்ள முடியும்.

6. தாமதமாகக் கிடைக்கும் அல்லது பூரணமற்றதாகக் கருதப்படும் விலைக்கோரல்கள் நிராகரிக்கப்படுவதுடன் இவ்விற்பனையுடன் தொடர்புடைய சகல விடயங்கள் குறித்தும் நில அளவையாளர் நாயகத்தால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகக் கருதப்படும்.

விற்பனைக்கு உத்தேசித்துள்ள பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பொருள் விபரங்கள் :-

(1) அலுவலக உபகரணங்கள்
(2) கணினி மற்றும் உதிரிப்பாகங்கள்
(3) வாயு சீராக்கி இயந்திரங்கள்
(4) மின் உபகரணங்கள்
(5) உபயோகிக்கப்பட்ட வேறு பொருட்கள்
(6) வித்தியாசமான அளவிலான டயர் குவியல்

தொலைபேசி இல. 2368106, 2369014, 2369011 நீடிப்பு 248.
தொலைநகல் இல. 2368106.

நில அளவையாளர் நாயகம்.

நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
இல. 150, கிருல வீதி,
கொழும்பு 5,
2015, யூன் 12.

6-400

**இலங்கைப் புகையிரத சேவைகள்**

விலைமனுக் கோரல்

**கந்தளாய் புகையிரத நிலைய திறந்தவெளியில் (EN 45E1 புகையிரத தண்டவாளப் பகுதி) பதிப்பதற்காக 12,000 எண்ணிக்கையுள்ள கொன்கிறீட் சிலிப்பர்களுக்கான பெறுகை**

பெறுகை இல. : SRS/F.7182

கந்தளாய் புகையிரத நிலைய திறந்தவெளியில் பதிப்பதற்காக 12,000 எண்ணிக்கையுள்ள கொன்கிறீட் சிலிப்பர்களின் கொள்வனவிற்காக உள்ளூர் உற்பத்தியாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து இலங்கை, கொழும்பு 10, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சின் அமைச்சுப் பெறுகைக் குழுவின் தவிசாளர் அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வார்.

2. விலைமனுக்கள் 2015, யூன் மாதம் 12 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணமாக 2,500 ரூபாவைச் செலுத்திய பின்னர் 2015.05.22 ஆந் திகதியிலிருந்து 2015.06.11 ஆந் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் மு. ப. 9.00 மணிக்கும் பி. ப. 3.00 மணிக்குமிடையில் இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளும் படிவங்களில் விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

4. விலைமனுக்கள், அவைகளை மூடியவுடன் உடனடியாகவே கொழும்பு 10, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை, 1 ஆம் இலக்கத்திலுள்ள போக்குவரத்து அமைச்சின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

5. அரக்கு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத்தபாலில் அனுப்பப்படலாம் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படலாம் அல்லது இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் சேர்க்கப்படலாம் :

தவிசாளர்,
அமைச்சு பெறுகைக் குழு,
செயலாளர் (மே. பா.),
போக்குவரத்து அமைச்சு,
இல. 1, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,
கொழும்பு 10.

6. விலைமனு ஆவணங்களை இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம், புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் இலவசமாகப் பரீட்சிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு பின்வருபவருடன் தயவுசெய்து தொடர்புகொள்ளவும் :

புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சியசாலைகள் திணைக்களம்,
த. பெ. இல. 1347, ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10,
தொலைபேசி இலக்கங்கள் : 94(11)2438078 அல்லது 94(11) 2436818.
தொலைநகல் இல. : 94(11)2432044.
மின்னஞ்சல் : srs.slr@gmail. com

தவிசாளர்,
அமைச்சுப் பெறுகைக் குழு,
போக்குவரத்து அமைச்சு.

குறிப்பீட்டு இல. SRS/F.7182

6-404

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

வரையறுக்கப்பட்ட ஓரியன்ட் பினான்ஸ் பொது நிறுவனத்தை (PB/75/PQ) ('OFL') வரையறுக்கப்பட்ட பார்ட்லீட் பினான்ஸ் பொது (PB/1079/PQ) நிறுவனத்துடன் இணைக்கும் உத்தேசம்

வரையறுக்கப்பட்ட ஓரியன்ட் பினான்ஸ் ('OFL') பணிப்பாளர் சபையும், வரையறுக்கப்பட்ட பார்ட்லீட் பினான்ஸ் ('BFL') நிறுவனப் பணிப்பாளர் சபையும் இவ்விரு நிறுவனங்களையும் ஒரே நிறுவனமாக இணைப்பது எனத் தீர்மானித்துள்ளன. 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு VIII இற்கு இசைவாக மேற்கொள்ளப் பட்டுள்ள இந்த இணைப்பின்படி பார்ட்லீட் பினான்ஸ் நிறுவனமே நிலைத்திருக்கும் நிறுவனமாக இருக்கும்.

இவ்விரு நிறுவனங்களினதும் இணைப்பு தொடர்பான தீர்மானம் 2015, யூன் மாதம் 25 ஆந் திகதி இடம்பெறவுள்ள சம்பந்தப்பட்ட இரு நிறவனங்களினதும் பங்குதாரர்கள் விசேட பொதுக் கூட்டத்தில் எடுக்கப்படவுள்ள தீர்மானத்தின் பிரகாரம் அமுலுக்கு வரும். இதுவும் 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் விதிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளவைக்கு இசைவாக இடம்பெறவுள்ளது.

இந்த இணைப்பின் பிரகாரம் 'OFL' நிறுவனம் 'BFL' நிறுவனத்துடன் இணைக்கப்பட்டு 'OFL' இன் பங்குதாரர்களுக்கு பின்வரும் அடிப்படையில் 'OFL' இல் அவர்கள் கொண்டிருந்த பங்குகளுக்கான கொடுப்பனவு இரு நிறுவனங்களினதும் இணைப்புத் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் செலுத்தப்படும்.

குறிப்பிட்ட திகதியில் 'OFL' இல் இருந்த ஒவ்வொரு (1) சாதாரண வாக்குரிமைப் பங்கிற்கும் ரூபா 14.97 (பதினான்கு ரூபா தொண்ணூற்றேழு சதம்) ஐ 'BFL' நிறுவனம் செலுத்தும். ஆனால், யாராவது ஒரு 'OFL' பங்குதாரர், தனது பங்கினை 'BFL' உடன் தொடர்ந்து வைத்திருக்க விரும்பினால் 'BFL' அவருக்கு 1 (ஒன்று) நிறுவன 'OFL' இல் அவர் கொண்டிருந்த ஒரு சாதாரண வாக்குரிமைப் பங்கிற்காக 9.075 'BFL' பங்குகளை விநியோகிக்கும். இவ்வாறு புதிதாக விநியோகிக்கப்படும் சாதாரண வாக்குரிமைப் பங்குகள் அனைத்தும் சகல வழிகளிலும் 'BFL' இல் தற்போதுள்ள சாதாரண வாக்குரிமைப் பங்குகளின் சம அந்தஸ்த்தினைப் பெற்றிருக்கும். இந்தப் பங்குகள், அவை வழங்கப்படும் தினத்தில் இருந்து வாக்குரிமை மற்றும் நிறுவனத்தினால் விநியோகிக்கப்படும் பங்கிலாபம் என்பனவற்றைப் பெற்றிருப்பதோடு, கம்பனி திவாலாகும் பட்சத்தில் அதன் சொத்துக்கள் பகர்விலும் சமமான உரிமையைப் பெற்றிருக்கும்.

'BFL' பணிப்பாளர் சபையின் கருத்தின் பிரகாரம், கம்பனி இணைப்புக்குப் பின்னர் 'OFL' பங்குதாரர்களுக்குச் செலுத்தப்படவுள்ள மேற்படி கொடுப்பனவானது, மிகவும் நியாயமான, நீதியான ஒரு தீர்வாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

'OFL' பங்குதாரர் ஒருவரின் ஒதுக்கப்பட்ட பங்குத் தொகையானது, பகுதிபட்ட ஒரு தொகையாக இருக்கும் பட்சத்தில், 'BFL' அந்தத் தொகையை அதற்கு மிகவும் கிட்டிய ஒரு தொகையாகக் கணித்து பங்குகளை வழங்கும்.

இந்த இணைப்புக்கான விதிகளின் பிரகாரம் 'OFL' இல் உள்ள சகல பங்குகளும், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய கரிசனைகள் எதுவும் இன்றி இரத்துச் செய்யப்படும். அதன் பின்னர் 'BFL' நிறுவனமே 'OFL' இன் சகல சொத்துக்களுக்கும், பொறுப்புக்களுக்கும் பொறுப்பாக இருக்கும். தொடர்ந்து செயற்படும் கம்பனியாக 'BFL' நிறுவனமே இருக்கும். அதன் பங்குகள் எதுவும் இரத்துச் செய்யப்படமாட்டாது.

'BFL' நிறுவனப் பணிப்பாளர் சபை இந்த விடயத்தில் பூரண திருப்தியடைந்துள்ளது. இணைப்புக்குப் பின் ஒருங்கிணைக்கப்பட்ட 'BFL' கம்பனி உடனடியாகச் செயற்படத் தொடங்கும். அதன் கடன் தீர்வு சோதனைகளிலும் அது வெற்றியடையும் என்று நம்பிக்கை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு கம்பனிகளினதும் பங்குதாரர்கள் மத்தியில் இந்த இணைப்புத் தீர்மானம் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது அங்கீகரிக்கப்படும் பட்சத்தில், கம்பனிகள் பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்படும் சான்றுப்பத்திரத்துக்கு இசைவாக, குறிப்பிட்ட தினத்தில் அது அமுலுக்கு வரும்.

இரு கம்பனிகளினதும் பங்குதாரர்கள், கடன் கொடுத்தோர் அல்லது இவ்விரு நிறுவனங்களும் ஏதோ ஒரு வகையில் கடமைப்பட்டுள்ள தனி நபர்கள் இந்த இணைப்புத் தொடர்பான யோசனைகளை, இவ்விரு நிறுவனங்களினதும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதிவுசெய்யப்பட்ட அலுவலகங்களில் பார்வையிடலாம்.

இரு கம்பனிகளினதும் பங்குதாரர்கள், கடன் கொடுத்தோர் அல்லது இவ்விரு நிறுவனங்களும் ஏதோ ஒரு வகையில் கடமைப்பட்டுள்ள தனி நபர்கள் வேண்டிக்கொள்ளும் பட்சத்தில், அவர்களுக்கு இந்த யோசனைகள் அடங்கிய ஆவணம் இலவசமாக வழங்கப்படும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

| | |
|---|---|
| கம்பனியின் செயலாளர்,<br>ஓரியன்ட் பினான்ஸ்<br>வரையறுக்கப்பட்ட நிறுவனம். | கம்பனியின் செயலாளர்,<br>பார்ட்லீட் பினான்ஸ்<br>வரையறுக்கப்பட்ட நிறுவனம். |
| பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்,<br>3 ஆம் மாடி, இல. 2, டீல் பிளேஸ்,<br>கொழும்பு 3. | பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்,<br>3 ஆம் மாடி, இல. 2, டீல் பிளேஸ்,<br>கொழும்பு 3. |

6-373

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு மாவட்டத்தில், அவிசாவளை நீதிமன்ற வலயத்தில் வதியும் பிரசித்த நொத்தாரிசு திரு. ஜீ. யூ. புஷ்பகுமார அவர்களினால் 2006.07.14 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இலக்கம் 1951 கொண்ட அற்றோணித் தத்துவத்தின் பிரகாரம் புவக்பிட்டிய, மிரிஸ்வத்த, இல. 59 ஐக் கொண்ட இடத்தில் வதியும் (தே. ஆ. அ. அ. இல. 465240563 X) கொண்ட ரதுகமகே கிரிமெனிகே ஆகிய என்னால் புவக்பிட்டிய, மிரிஸ்வத்த, இலக்கம் 59 இல் வதியும் சனத் விஜேசுந்தர என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணித் தத்துவம் இத்தால் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுகிறதெனவும், கூறப்பட்ட ஆவணம் இன்று முதல் வலுவற்றதெனவும் அனைவருக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கிறேன்.

ரதுகமகே கிரிமெனிகே.

6-275

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கட்டுநேரிய, புளுகஹவெவ வீதியில் வசிக்கும் சக்ரவர்னிகே சமந்த கெலும் பெர்னாந்து ஆகிய என்னால் கட்டுநேரிய, புளுகஹவெவ வீதி, இல. 818பீ இல் வசிக்கும் தென்னக்கோன் முதியன்சேலாகே லலித் சமந்த என்பவருக்கு அதிகாரத்தை வழங்கி எம். சமிலா மாரி பெர்னாண்டோ சிலாபம் நீதிமன்ற அதிகாரப் பிரதேசத்தின் பகிரங்க நொத்தாரிசுவினால் 2006.01.19 ஆந் திகதி எழுதி உறுதிசெய்யப்பட்ட 108 ஆம் இலக்க அற்றோணி தத்துவத்தை இத்தால் இரத்துச் செய்வதாகவும், மேற்படி அற்றோணி தத்துவம் இன்று முதல் எந்தவித நேரடி அதிகாரம் அல்லது விளைவும் அற்ற ஆவணம் ஆகும் என சக்ரவர்த்திகே சமந்த கெலும் துஷார பெர்னான்டோ ஆகிய நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகிறேன்.

சக்ரவர்னிகே சமந்த கெலும் துஷார பெர்னான்டோ.

6-344

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இலக்கம் 60/3/1/1, பகிரவகந்த ஒழுங்கை, கண்டி என்னும் முகவரியில் வதியும் மொகமட் ஷிபான் இஷாக் ஆகிய நான், கடந்த 2013.07.29 ஆந் திகதி கண்டி வலயப் பிரசித்த நொத்தாரிசு எம். எப். வாஹிட் என்பவர் அத்தாட்சிப்படுத்திய 5525 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தின் மூலம் எனது தந்தை ஜய்னுலாப்தீன் மொகமட் இஷாக் என்பவரை எனது தத்துவகாரராக நியமித்திருந்தேன்.

மேற்குறித்த 5525 ஆம் இலக்க அற்றோணித் தத்துவத்தை, நான் இன்று முதல் இரத்துச் செய்கின்றேன் என்றும் இன்றிலிருந்து இந்த அற்றோணித் தத்துவப்பத்திரம் எவ்விதத்திலும் சட்ட வலிதற்றது என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நாட்டு மக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

மொகமட் ஷிபான் இஷாக்.

6-323

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

நீர்கொழும்பு, தெமன்ஹந்திய, பேஸ்லைன் வீதி, வெஸ்டர்சீடன் பாம், இல. 47 எனும் முகவரியில் குடியிருக்கும் என்கல்பேர்ட் ருடொல்ப் ஜோசப் போல்டர் ஆகிய நான் அமுன வீதி, சீதுவ தெற்கு, சீதுவ எனும் முகவரியில் குடியிருக்கும் பியன்விலகே ஹிலரி டெரன்ஸ் சிசில் விஜேசிங்க என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு பிலிஷியன் பெர்ணாந்துபுள்ளே அவர்களால் 2010.10.14 ஆந் திகதி எழுதி செய்யப்பட்ட 14651 ஆம் இலக்க விசேட அற்றோணித் தத்துவப் பத்திரத்தை எனது விருப்பத்தின் பேரிலும் அபிலாஷையின் பேரிலும் இத்தால் இரத்துச்செய்கிறேன். மேற்படி பியன்விலகே ஹிலரி டெரன்ஸ் சிசில் விஜேசிங்க என்பவரால் இன்று தொடக்கம் புரியப்படும் ஏதேனும் நடவடிக்கைகளுக்கு நான் பொறுப்புக் கூற மாட்டேன் என இதன் மூலம் அறிவித்தல் தருகிறேன்.

என்கல்பேர்ட் ருடொல்ப் ஜோசப் போல்டர்.

6-256

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

வத்துதுர கார்திஹேவா கால்ட்டன் டீ சில்வா நொத்தாரிசு அவர்களால் 2005.10.20 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய 2419 ஆம் இலக்கம் கொண்ட நுகேகொடை, மல்வத்தை, இல. 25/1ஏ எனும் முகவரியில் வசிக்கும் வீரசிறி நாராயன லலிதா ரத்னகாந்தி ஆகிய என்னால் இதே முகவரியில் வசிக்கும் இந்துருவகமகே குணசிங்க பாரத கல்யாணரத்ன என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச்செய்வதோடு இது முதல் என் சார்பில் குறித்த நபரால் மேற்கொள்ளப்படும் எந்த கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்பாளியல்ல எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

வீரசிறி நாராயன லலிதா ரத்னகாந்தி.

6-326

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஓலன்ட் இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 105695
கூட்டிணைப்புத் திகதி : 2015, மே 19
அதன் பதிவு முகவரி : இல. 2/5, வைட் லோடஸ் எவனியூ, துடாவ றோட், மடபாத்தை, பிலியந்தலை

6-268

---

### பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : பென்னீ லங்கா டுவர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் பழைய பெயரானது, மெய்ல் ட்ரவல்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் - 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 8 ஆம் பிரிவின்கீழ் 2015.04.27 ஆந் திகதி முதல் பெயர் மாற்றப்பட்டதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது

கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 101067
கம்பனி பதிவு முகவரி : இல. 403, ஹெந்தலை, வத்தளை

டபிள்யூபீஜீஎஸ் புஷ்பகுமார,
கம்பனிச் செயலாளர்கள்,
SEC/1/(b)(11) 2007/321.

6-282

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : லக்ஷ்மி இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்*
*கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 105696*
*கூட்டிணைப்புத் திகதி : 2015, மே 19*
*கம்பனி பதிவு முகவரி : இல. 2/5, வைட் லோடஸ் எவனியூ, துடாவ றோட், மடபாத்தை, பிலியந்தலை*

*6-267*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : எம்ரன் இன்டர்நஷனல் இன்வெஸ்ட்மென்ட் கம்பனி (பிறைவேட்) லிமிட்டெட்*
*கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 105780*
*கூட்டிணைப்புத் திகதி : 2015, மே 25*
*கம்பனி பதிவு முகவரி : முதலாவது மாடி, கன்ஃபிடன்ட் டெரேவல் கட்டிடம், இல. 5, சாந்த அந்தோனி மாவத்தை, கொழும்பு 3*

*6-266*

---

## அறிவித்தல்

*சிங்கர் பிஸ்னஸ் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டெட்*

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

சிங்கர் பிஸ்னஸ் ஸ்கூல் (பிறைவேட்) லிமிட்டெட் என்ற பெயரில் புதிய கம்பனியொன்று 2015 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆந் திகதி பீவீ 105194 எனும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென்பதையும் புதிய கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் விலாசனமானது இல. 80, நவம் மாவத்தை, கொழும்பு 2 இல் அமைந்துள்ளது என்பதையும் இத்தால் நாம் பகிரங்க அறிவித்தல் தருகிறோம்.

பிரமிலா டிக்கிரி குமாரி லியனகே,
கம்பனியின் கம்பனிச் செயலாளர்.

இல. 273/24, தேவனந்த மாவத்தை,
பஹலகராகஹமுன்ன,
கடவத்தை.

*6-254*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : ரொமெடா ஹோம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்*
*பதிவு இலக்கம் : பீவீ 105277*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2015, ஏப்பிறல் 27*
*பதிவு முகவரி : இல. 837, புதிய கண்டி வீதி, தலங்கம வடக்கு, மாலபே*

*46/065880.*

*6-295*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் : மாசம் பெஸ்ட் என்ஜினியரிங் அன்ட் கன்ஸ்ட்ரக்ஷன் (பிறைவேட்) லிமிட்டெட்*
*பதிவு இலக்கம் : பீவீ 105132*
*பதிவு முகவரி : இல. 129/டி/01, கஹட்டோவிட்ட, வெயாங்கொட*

கம்பனிச் செயலாளர்.

*6-304*

---

## கம்பனியின் பெயர் மாற்றம் பற்றிய பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி 2013.03.20 ஆந் திகதி முதல் பெயர் மாற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*பழைய பெயர் : ஃபேர்ன்கிளிஃப் பொட்டிக் பங்களோ அன்ட் ஸ்பா (பிறைவேட்) லிமிட்டெட்*
*புதிய பெயர் : ஃபேர்ன்கிளிஃப் பொட்டிக் பங்களோ (பிறைவேட்) லிமிட்டெட்*
*கம்பனி பதிவு இலக்கம் : பீவீ 72769*
*பதிவு முகவரி : இல. 47/6, அலெக்ஸான்றா பிளேஸ், கொழும்பு 7*

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*6-252*

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி 2015 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 15 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : குவான்ட் சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : *பீவீ 105104*
*பதிவு முகவரி* : இல. 13, 1 ஆம் குறுக்குத் தெரு, பருத்தித்துறை

டீஸ் மெனேஜ்மென்ட் கன்சல்ட்டன்ஸ்
மற்றும் செக்கிரட்டேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்.
கம்பனிச் செயலாளர்கள்.

*6-217*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : றோயல் கிறசன்ட் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவிலக்கம்* : *பீவீ 104412*
*கூட்டிணைப்புத் திகதி* : *2015.03.12*
*பதிவு முகவரி* : இல. 199/5பி, காலி வீதி, கல்கிசை

பணிப்பாளர்.

*6-218*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : லிவிங் சென்டர் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : *பீவீ 105623*
*பதிவு முகவரி* : இல. 10, நாரஹேன்பிட்டிய வீதி, நாவல
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : *14.05.2015*

கோர்ப்பரேட் அட்வைசரி சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

*6-253*

---

## பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : ரீஜன்ட் எஸ்ட்டேட் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : *பீவீ 103304*
*பதிவு முகவரி* : இல. 93/1, 1/1, மெனிங் பிளேஸ், வெள்ளவத்தை, கொழும்பு 6
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 20.01.2015

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

*6-383*

---

## வரையறுக்கப்பட்ட பொறுப்புள்ள கம்பனியொன்றின் கூட்டிணைப்பிற்கான பொது அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : அகெஸா சொலூசன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி இலக்கம்* : *பீவீ 105307*
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015, ஏப்பிறல் 28
*பதிவு அலுவலக முகவரி* : இல. 190/48, வீர கார்டன்ஸ், வீர மாவத்தை, தேப்பானாம, பன்னிப்பிட்டிய

ஷாமில் மனீஷா பலகொட ஹெட்டிகே,
கம்பனிச் செயலாளர்.

*6-324*

---

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பெயர் மற்றும் இலக்கத்தின்கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : கலியன் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2015, மே 19
*கம்பனி இலக்கம்* : *பீவீ 105691*
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 19, விவேகானந்தா வீதி, கொழும்பு 6

எக்கவுண்ட்டிங் அன்ட் எலைட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

இல. 67ஏ, டேவிட்சன் வீதி,
கொழும்பு 4.

*6-396*

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், எம். ஏ. எச். இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் எனும் கம்பனிப் பெயரை எம். ஏ. எச். இன்னோவேட்டார்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என 2015, ஏப்பிறல் மாதம் 24 ஆந் திகதி முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் முன்னைய பெயர் : எம் ஏ எச் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 100848
பதிவு அலுவலகம் : இல. 409, 3 ஆவது மாடி, காலி வீதி, கொழும்பு 3
கம்பனியின் தற்போதைய பெயர் : எம் ஏ எச் இன்னோவேட்டார்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரண்டிக்ஸ் மெனேஜ்மென்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 409, 3 ஆவது மாடி, காலி வீதி,
கொழும்பு 3.

6-322/3

---

## கம்பனியின் இறுதிப் பொதுக்கூட்டம், கடன் கொடுத்தோர் கூட்டம் மற்றும் கம்பனி கலைத்தலுக்குமான அறிவித்தல்

ஹோட்டல் நல்லூர் லிமிட்டெட்
(கடன் கொடுத்தோர் தன்னிச்சையான ஒடுக்குதல்)

**கம்பனியின் பதிவு இல. பீபி 3815**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 341(1) ஆம் பிரிவின்கீழ், மேற்படி கம்பனியின் கலைப்புக்கு முந்திய இறுதிப் பொதுக்கூட்டம் மற்றும் கடன் கொடுத்தோர் கூட்டம் என்பன 2015 ஆம் ஆண்டு ஆடி மாதம் 20 ஆந் திகதி பி. ப. 4.00 மணியளவில் கொழும்பு 4, காசல் ஒழுங்கை, இலக்கம் 2, 4 ஆம் மாடியில் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி கூட்டமானது கலைத்தலுக்கான கணக்கு விபரங்களை அங்கத்தவர்களுக்கு சமர்ப்பிப்பதற்காக கூட்டப்படுகின்றது. அது,

(1) ஒடுக்குதல் எவ்வாறு நடைபெற்றது ;
(2) கம்பனியின் சொத்துக்கள் ஏதுமிருப்பின் அவற்றை விற்று ஒதுக்கிய முறை ; மற்றும்
(3) இவை பற்றிய விளக்கம் அளித்தல்.

பீ. ஈ. ஏ. ஜயவிக்கிரம, ஜீ. ஜே. டேவிட்,
இணை கலைப்பாளர்,
ஹோட்டல் நல்லூர் லிமிட்டெட்.

2015, வைகாசி 26.

6-339

## பொது அறிவித்தல்

க்ளோபல் ட்ரேட் சேர்விசெஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் அதனது பெயரை 2015, மே 18 ஆந் திகதியிலிருந்து செயலுறும் வகையில் கொடக்னா லங்கா (பிறைவேட்) லிமிட்டெட் என 7 ஆம் இலக்கச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக மாற்றியுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

புதிய கம்பனியின் பெயர் : கொடக்னா லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 92268
பதிவு அலுவலகம் : இல. 353/1, கெரவலப்பிட்டிய வீதி, ஹெந்தளை, வத்தளை

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்,
கொடக்னா லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்.

6-399

---

## வரையறுக்கப்பட்ட கம்பனியின் கூட்டிணைப்பிற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

| கம்பனியின் பெயர் | கம்பனியின் இல. | பதிவு அலுவலகம் | பதிவுசெய்யப் பட்ட திகதி |
|---|---|---|---|
| லகூன் வீவ் என்டர்-பிரைசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட் | பீவீ 105633 | இல. 98/2, ஜாவத்த றோட், கொழும்பு 5 | 15.05.2015 |

மேற்குறிப்பிட்ட கம்பனிக்காக,

லீட்ஸ் கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 98/2, ஜாவத்த வீதி,
கொழும்பு 5.

6-257

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், எதீனா இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

எனும் கம்பனிப் பெயரை எதீனா இன்னோவேட்டார்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என 2015, ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் முன்னைய பெயர் : எதீனா இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 100900
பதிவு அலுவலகம் : இல. 409, 3 ஆவது மாடி, காலி வீதி, கொழும்பு 3
கம்பனியின் தற்போதைய பெயர் : எதீனா இன்னோவேட்டார்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரண்டிக்ஸ் மெனேஜ்மென்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 409, 3 ஆவது மாடி, காலி வீதி,
கொழும்பு 3.

6-322/2

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : அதெனா க்ரெசுவேட் சொலூசன் அன்ட் லொஜிஸ்டிக் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 105757
பதிவுசெய்யப்பட்டுள்ள அலுவலக முகவரி : இல. 63/3, 5 ஆம் ஒழுங்கை, எதிரிசிங்க வீதி, மிரிஹான, நுகேகொட
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 2015, மே 21

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிஸ்னஸ் சொலுசன்ஸ் அன்ட் செக்கிரடரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

6-343

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், சீகல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் எனும் கம்பனிப் பெயரை சீகல் இன்னோவேட்டார்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் என 2015, மே மாதம் 6 ஆந் திகதி முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் முன்னைய பெயர் : சீகல் இன்வெஸ்ட்மென்ட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனி இலக்கம் : பீவீ 100853
பதிவு அலுவலகம் : இல. 409, 3 ஆவது மாடி, காலி வீதி, கொழும்பு 3
கம்பனியின் தற்போதைய பெயர் : சீகல் இன்னோவேட்டார்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரண்டிக்ஸ் மெனேஜ்மென்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

இல. 409, 3 ஆவது மாடி, காலி வீதி,
கொழும்பு 3.

6-322/1

---

# ஏல விற்பனைகள்

**பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க.**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேடஏற்பாடுகள் ) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் (மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் தெல்கந்தை பதிவுப் பதிவுப் பிரிவிற்குள்), சல்பிட்டி கோறளை, பள்ளேபற்று, தெஹிவளை-கல்கிஸ்ஸை மாநகர சபை எல்லைகளுக்குள் வட்டார இல. 20-இரத்மலானையில் அமைந்துள்ளதும் டீ சொய்ஸா மாவத்தை, வரிமதிப்பு இல. 7 ஐக் கொண்டதும் "இரத்மலானை எஸ்ட்டேட்" என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டி. ஏ. வீரக்கொடி அவர்களால் தயாரிக்கப்பட்டு 2008.07.21 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1415 இல் குறிப்பிடப்பட்டு துண்டு ஏ (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டி. ஏ. வீரக்கொடி அவர்களால் தயாரிக்கப்பட்டு 2006.11.08 ஆந் திகதியிடப்பட்ட வரைபட இல. 1192பி இல் குறிப்பிடப்பட்டு துண்டு 2 என அடையாளமிடப்பட்ட காணியும் உத்தரவுபெற்ற நில அளவை யாளர் டி. ஏ. வீரக்கொடி அவர்களால் மீள் அளவை செய்யப்பட்டு 2006.11.06 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட வரைபட இல. 1192பி இல் குறிப்பிடப்பட்ட துண்டு 2 என அடையாளமிடப்பட்டதுமான காணியும்) அதன்கண் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்ச் செய்கைகள் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : 1ஏ. 3றூ. 23.5பே.)**

(கடப்பாடுடையவரான எக்ஸ்ஸெல் புறொப்பர்ட்டி டெவெலொப்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட், பிரசித்த நொத்தாரிசு பீ. எஸ். எஸ். என். ராஜகருணா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 2011, திசெம்பர் 2 ஆந் திகதியிடப்பட்ட முதன்மை ஈட்டுமுறி இல. 4831 மற்றும் 2011, திசெம்பர் 2 ஆந் திகதியிடப்பட்ட இரண்டாம் நிலை ஈட்டுமுறி இல. 4833 ஆகிய இரண்டினதும் மீதான வரவேண்டிய கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்.)

**ஆதனத்தைச் சென்றடையும் வழி.**- கொழும்பிலிருந்து காலி வீதி வழியாக இரத்மலானை நோக்கிச் சென்று, கல்கிஸ்ஸையைக் கடந்து ரெம்பிலர்ஸ் வீதிக்கு இடப்பக்கம் திரும்பி, 1.2 கி. மீ. தொடர்ந்து டீ சொய்சா மாவத்தைக்கு இடப்பக்கம் திரும்பி, வலப்பக்கத்தில் அமைந்துள்ள விற்பனைக்குரிய ஆதனத்தை அடைவதற்கு ஏறக்குறைய 100 மீற்றர் செல்லவும்.

பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க. இனால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2015, யூலை 02 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் வைத்து நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2015.05.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், அதே திகதிய "டெய்லி நியூஸ்", "லக்பிம" மற்றும் "சுடர் ஒளி" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வனவாளர் ஏல விற்பனை முடிவில் பின்வரும் தொகைகளை ஏலதாரருக்கு காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகாரசபை கட்டணங்கள் 1% மற்றும் அதே போன்று பெ.சே.வ. கட்டணங்கள் ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2.5% (இரண்டரை வீதம் மட்டும்) ;
(4) மொத்த விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணங்கள் ;
(5) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தும் கட்டணம் ;
(6) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 1,500 ரூபா மற்றும் விற்பனையில் உறப்பட்ட வேறேதேனும் கட்டணங்கள்.

கொள்வனவு விலையின் மிகுதி 90%(தொண்ணூறு வீதம்) விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் வங்கிக்குச் செலுத்த வேண்டும். சொல்லப்பட்ட தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள்விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் "கொழும்பு 3, காலி வீதி, இல.450, தலைமை அலுவலகம், பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப.வ.க., சட்ட சம்பந்தமான தலைமைத்துவம்" இடம் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-2565573, 011-2565565.

துசித்த கருணாரத்ன,
நீதிமன்ற ஆணையாளர், விலைமதிப்பிடுநர்,
மற்றும் உத்தரவுபெற்ற ஏலதாரர்.

இல.182/3 (50/3), விஹார மாவத்தை,
கொலன்னாவை.
தொலைபேசி இல. 011-3068185.
தொலைநகல் இல. : 011-2572940.

6-368

## கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ — புத்தளம் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-*

**அட்டவணை**

**வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், புத்தளம் கிரவட்ஸ் புத்தளம் நகரம் ஆராச்சிவில்லு கிராமத்தில் அமைந்துள்ள பாகுஸ் தோட்டம் காணியின் நிலஅளவையாளர் ஜே. ஏ. வீ. ராஜநாயகத் தினால் தயாரிக்கப்பட்ட 2007.01.15 ஆந் திகதிய வரைபட இலக்கம் 3017ஏ இல் காண்பிக்கப்பட்ட லொட் 1.**

**காணியின் விஸ்தீரணம் :
பதினைந்து ஏக்கர் ஒரு றூட் முப்பத்தொரு பேர்ச்
(15ஏ. 1றூ. 31பே.)**

**இக்காணியில் அமைந்துள்ள கட்டிடங்கள், மரங்கள், தாவரங்கள் அனைத்தையும் சேர்த்து :**

*(கடன் எடுத்த இலங்கைச் சட்டப்படி தாபிக்கப்பட்டு இலக்கம் 14, ஸ்பில் றோட், புத்தளம் என்ற விலாசத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ள ஏ. எஸ். ஆர். வெஜிடபிள் ஒயில் கொம்ப்ளெக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் மேற்படி காணியை கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத் துள்ளது.)*

என்னால் மேற்சொல்லப்பட்ட காணியை அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் 2015, யூலை மாதம் 10 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2014.05.23 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும், ஏலவிற்பனை விளம்பரத்திற்காக 2015.06.12 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2015.06.15 ஆந் திகதியுடைய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடையும் விதம்.**- கொமர்ஷல் பாங்க் புத்தளம் கிளை அருகில் இருந்து குருநாகல் றோட்டில் 2.8 கிலோ மீற்றர் சென்ற பிறகு இடதுபக்கம் ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- வெற்றி பெற்ற கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் 2,000 ரூபா ;
(5) இலிகிதர் கட்டணம் 500 ரூபா ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;
(7) VAT வரி.

*மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது புத்தளம் கிளையில் செலுத்த வேண்டும்.*

*வேறு விபரங்களுக்காக.-* முகாமையாளர், கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 116ஏ, குருநாகல் றோட், புத்தளம். தொலைபேசி இல. : 032-2266364-5 ; தொலைநகல் இல. : 032-2266366.

எல். பீ. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182,
3 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/தொலைநகல் இல. 011-2445393.
மின்-அஞ்சல் : senaservice@sltnet.lk

6-381

---

**டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீ**

(முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வர்தன வங்கி என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழான விற்பனை*

**பெறுமதிமிக்க சொத்துகள் பகிரங்க ஏல விற்பனை**

***140 ஆம் இலக்க பிணை உறுதி மூலம் அடகுவைக்கப்பட்ட உடைமையின் விபரம்***

***கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடி பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த காத்தான்குடி நகரசபை எல்லைகளுக்கு உட்பட்ட 6 ஆம் வட்டாரம், இல. 58, பவுன்டரி லேன் என்ற முகவரியில் அமைந்துள்ள 'வேம்பு பூமி' என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. சிங்கராஜா அவர்களால் வரையப்பட்ட 2011 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 14 ஆந் திகதியிடப்பட்ட AS/11/Kat/ 182A ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டு அதிலுள்ள நிலையான கட்டடங்கள், கிணறு மற்றும் அனைத்தும் அடங்கலாக.***

***காணியின் விஸ்தீரணம் : சைபர் ஏக்கர் சைபர் றூட் சைபர் ஏழு தசம் ஐந்து ஒன்று (0ஏ. 0றூ. 07.51பே.) அல்லது (0.0190 ஹெக்டெயர்)***

***கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், காத்தான்குடி மண்முனைப்பற்று, காத்தான்குடி கிராமத்தில் அமைந்துள்ள 'வேம்பு பூமி' என அழைக்கப்படும், பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான மேல் அரைப்பங்குக் காணித்துண்டு. அளவுகள் - வடக்கிலிருந்து தெற்கு வரை ஒன்பது (9) பாகமும் இரண்டு (2) அடியும் ஆறு அங்குலங்களும் (6), கிழக்கிலிருந்து மேற்கு வரை ஆறு (6) பாகங்களும் ஒரு (1) அடியும் பத்து (10) அங்குலங்களும் அதில் அமைந்துள்ள வீடு மற்றும் கிணறு உட்பட அனைத்தும் அடங்கலாக.***

*(மட்டக்களப்பு பிரசித்த நொத்தாரிசு ஆர். காயத்திரி அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதியிடப்பட்ட 140 ஆம் இலக்க பிணை உறுதி மூலம், காத்தான்குடியில் வசிக்கும் மொஹமட் சலீம் மொஹமட் ஷில்மி மற்றும் கச்சி மொஹமட் மொஹமட் சலீம் ஆகியோரால் டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீக்கு (முன்னர் வரையறுக்கப்பட்ட டீஎப்சீசீ வர்தன வங்கி) அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத சொத்து.*

டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீயினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2015 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யப்படும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.-** ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை ரொக்கப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்) ;
(4) மொத்த விளம்பரச் செலவு 1,22,000 ரூபா ;
(5) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,000 ரூபா.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் சட்ட ரீதியான விதிப்பனவுகள், தீர்வைகள், வரிகள் அல்லது இலங்கை அரசாங்கத்தினால் அல்லது வேறு ஏதாவது அதிகார சபையினால் அவ்வப்போது விதிக்கப்படுகின்ற கட்டணங்களுடன் செலுத்தப்பட வேண்டும்.

**மேலதிக விபரங்களுக்கு.-** 011-2442442 என்னும் தொலைபேசி இலக்கம் மூலம் டீஎப்சீசீ வர்தன வங்கி பீஎல்சீயின் சட்டப் பிரிவுடன் தொடர்பு கொள்ளவும்.

"முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது."

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்,
123 வருட கால மகோன்னத
சேவையுடன்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்-அஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்-அஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

6-306

**யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**மேல் மாகாணம்,கம்பஹா மாவட்டத்தில், அளுத்குருகோரளையின் ராகம்பற்றுவில் எலப்பிட்டி வளவில் அமைந்துள்ள கட்டவெல கஹவத்த, பெலிகஹவத்த, றுக்கத்தன கஹவத்த, கஜுகஹகும்புர, எதந்தேகும்புர, பெலிகஹவத்த அல்லது பெலகொட்டுவ என்று கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. எம் . கமல் பெரேராவால் தயாரிக்கப்பட்ட 2012, நவெம்பர் 7 ஆந் திகதியிடப்பட்ட 285 / 2012 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு 1 எனக் குறித்துக்காட்டப்பட்ட அனைத்து பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணிப்பகுதி உள்ளடக்கிய பரப்பளவு இருபத்தொன்று தசம் ஒன்று இரண்டு பேர்ச் (0ஏ. 0றூ. 21.12பே.) மற்றும் அதிலுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் அதிலுள்ள அனைத்தும் சேர்த்து.**

கம்பஹா பிரசித்த நொத்தாரிசு ஆர். எம். என். டபிள்யூ. ராஜகருணா வால் உறுதிப்படுத்தப்பட்ட 2013.01.28 ஆந் திகதியிடப்பட்ட 28719 ஆம் இலக்கம் ஈட்டுமுறிக்கு ஏற்ப 'கவிந்து ஸ்டோர்ஸ்' பங்காளிகளாகிய அதிகாரிகே ஜயசிறி மற்றும் ரணேபுர தேவகே சுதர்மகுமாரி குணதிலக ஆகியோர் கடப்பாடு உடையவர்களாக அதிலுள்ள அட்டவணையில் கூடுதலாக விபரிக்கப்பட்ட உரிமைகள், ஆதனம் மற்றும் வளவுகளை இல. 64, காலி வீதி, கொழும்பு 3, எனும் முகவரியிலுள்ள யூனியன் பேங்க் ஒப் கொழும்பு வங்கிக்கு அதில் பெற்றுக் கொண்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்கான பிணையாக ஈடுவைத்து ஒப்படைத்துள்ளதுடன் கூறப்பட்ட 'கவிந்து ஸ்டோர்ஸ்' பங்காளிகளாகிய அதிகாரிகே ஜயசிறி மற்றும் ரணேபுர தேவகே சுதர்ம குமாரி குணதிலக ஆகியோர் கூறப்பட்ட ஈட்டுமுறி மூலம் வழங்கப்பட்ட வசதிகளுக்காக கொடுக்க வேண்டிய கொடுப்பனவைச் செலுத்தத் தவறியுள்ளனர்.

கூறப்பட்ட யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீயால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கேற்ப மேற்குறிப்பிட்ட ஆதனத்தை நாம் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யவுள்ளோம்.

ஏலவிற்பனை 2015, யூலை 3 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- ராகம நகரத்திலிருந்து புறப்பட்டு மஹபாகே வீதி வழியாக சுமார் 1 கிலோமீற்றர் பயணம் செய்து வலது பக்கமாக 10 அடி அகலமான கொங்கிறீற் பாதையில் சென்று அதன் இடது பக்கமுள்ள சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- கொள்வனவு முயற்சியில் வெற்றிபெறுபவர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத் தொகையினை ஏல விற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) முடிவுசெய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து சதவீதம் (10%) ;
(2) விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி ( 90%) வீதமும் யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பி. எல்.சி. தலைமை அலுவலகத்தில் வைப்புச்செய்யப்படல் வேண்டும் ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;
(4) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(5) விளம்பரச் செலவுகள் மற்றும் வேறு அறவீடுகள் ;
(6) இலிகிதர், முரசறைவோர் கட்டணம் ஆயிரம் ரூபா (1,000 ரூபா) ;
(7) நொத்தாரிசு கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் 2,000 ரூபா.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியிடம் தொடர்புகொண்டு பெற முடியும் :

சட்டப் பிரிவு, யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு 3 ; தொலைபேசி இல. 011-2374100.

திரிவன்கா அன்ட் சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம்,
மேல் மாகாணம்-கொழும்பு மாவட்ட நீதிமன்ற,
அரச மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆம் மாடி,
ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி இல. : 077-3181891.

6-391

---

**யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

**மேல் மாகாணம்,கம்பஹா மாவட்டத்தில், சியனேகோரளையின் அதிகாரிபற்றுவில் வேபொட தெற்கு கிராமத்தில் அமைந்துள்ள கொடபரகஹவத்த எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் ஜே. பி. என். ஜயசுந்தரவால் தயாரிக்கப் பட்ட 2003, பெப்புருவரி 2 ஆந் திகதியிடப்பட்ட 2409 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு 1 எனக் குறித்துக்காட்டப் பட்ட அனைத்து பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணிப்பகுதி உள்ளடக்கிய பரப்பளவு பன்னிரண்டு தசம் ஒன்பது பேர்ச் (0ஏ. 0றூ. 12.9பே.) மற்றும் மரங்கள், பயிர்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் சேர்த்து.**

மேற்கூறப்பட்ட வேபொட தெற்கில் அமைந்துள்ள கொடபரகஹவத்த எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. பி. என். ஜயசுந்தரவால் தயாரிக்கப்பட்ட 02. 02. 2003 ஆம் திகதியிடப்பட்ட 2409 ஆம் இலக்கமிடப்பட்ட படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு 2 எனக் குறித்துக் காட்டப்பட்ட அனைத்து பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணிப்பகுதி உள்ளடக்கிய பரப்பளவு பன்னிரண்டு தசம் எட்டு பேர்ச் ( 0ஏ. 0றூ. 12.8பே.) மற்றும் மரங்கள், பயிர்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் சேர்த்து.

மேற்கூறப்பட்ட வேபொட தெற்கில் அமைந்துள்ள கொடபரகஹவத்த எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. பி. என். ஜயசுந்தரவால் தயாரிக்கப்பட்ட 2409 ஆம் இலக்கமிடப்பட்ட

படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு 3 எனக் குறித்துக் காட்டப்பட்ட அனைத்து பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணிப் பகுதி உள்ளடக்கிய பரப்பளவு பன்னிரண்டு தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 12.5பே.) மற்றும் மரங்கள், பயிர்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் சேர்த்து.

மேற்கூறப்பட்ட வேபொட தெற்கில் அமைந்துள்ள கொடபரகஹவத்த எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. பி. என். ஜயசுந்தரவால் தயாரிக்கப்பட்ட 2409 ஆம் இலக்கமிடப்பட்ட படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு 4 எனக் குறித்துக் காட்டப்பட்ட அனைத்து பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணிப் பகுதி உள்ளடக்கிய பரப்பளவு பன்னிரண்டு தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 12.5பே.) மற்றும் மரங்கள், பயிர்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் சேர்த்து.

மேற்கூறப்பட்ட வேபொட தெற்கில் அமைந்துள்ள கொடபரகஹவத்த எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. பி. என். ஜயசுந்தரவால் தயாரிக்கப்பட்ட 2409 ஆம் இலக்கமிடப்பட்ட படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு 5 எனக் குறித்துக் காட்டப்பட்ட அனைத்து பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணிப் பகுதி உள்ளடக்கிய பரப்பளவு பன்னிரண்டு தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 12.5பே.) மற்றும் மரங்கள், பயிர்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் சேர்த்து.

மேற்கூறப்பட்ட வேபொட தெற்கில் அமைந்துள்ள கொடபரகஹவத்த எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜே. பி. என். ஜயசுந்தரவால் தயாரிக்கப்பட்ட 2409 ஆம் இலக்கமிடப்பட்ட படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு 6 எனக் குறித்துக் காட்டப்பட்ட அனைத்து பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணிப் பகுதி உள்ளடக்கிய பரப்பளவு பன்னிரண்டு தசம் ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 12.5பே.) மற்றும் மரங்கள், பயிர்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் சேர்த்து.

கூறப்பட்ட 2409 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காட்டப்பட்ட காணித்துண்டு 7 மேலாகவும் வழியாகவும் உள்ள ( 15 அடி அகலம்) பாதைக்கான உரிமையுடனும் சேர்த்து.

**மேலதிக விபரங்களுக்கு**.- 17. 10. 2014 ஆம் திகதியிடப்பட்ட அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தலைப் பார்க்கவும்.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு இராணி கருணாநாயக்கவால் உறுதிப்படுத்தப்பட்ட 2013.02.11 ஆம் திகதியிடப்பட்ட 639 ஆம் இலக்க முடைய முதலாவது ஈட்டுமுறி மற்றும் 2013.07.29 ஆம் திகதியிடப்பட்ட 752 ஆம் இலக்கமுடைய இரண்டாவது ஈட்டு முறி ஆகியவற்றுக்கு ஏற்ப கல்நார கொமோடிரீஸ்( பிறைவேற்) லிமிட்டெட் கடப்பாடு உடையவராகவும் மற்றும் சுமேதா உபேக்ஷா செனவிரத்ன மற்றும் குமார செனவிரத்ன ஆகியோர் ஈடுவைப்பாளர்களாகவும் இருந்து அதிலுள்ள அட்டவணையில் கூடுதலாக விபரிக்கப்பட்ட உரிமைகள் ஆதனம் மற்றும் வளவுகளை இல. 64, காலி வீதி, கொழும்பு 3 எனும் முகவரியிலுள்ள யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீக்கு அதில் அவர்களால் பெற்றுக் கொண்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்கான பிணையாக ஈடுவைத்து ஒப்படைத்துள்ளதுடன் கூறப்பட்ட கல்நார கொமோடிரீஸ் (பிறைவேற்) லிமிட்டெட், கூறப்பட்ட ஈட்டுமுறி மூலம் வழங்கப்பட்ட வசதிகளுக்காக கொடுக்க வேண்டிய கொடுப்பனவைச் செலுத்தத் தவறியுள்ளனர்.

கூறப்பட்ட யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீயால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்கேற்ப மேற்குறிப்பிட்ட ஆதனத்தை நாம் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனை செய்யவுள்ளோம்.

ஏலவிற்பனை 2015, யூலை 3 ஆந் திகதி பி. ப. 1.00 மணிக்கு நடைபெறும்.

**ஆதனத்தை வந்தடைதல்**.- கடவத்த நகர மத்தியிலிருந்து புறப்பட்டு கண்டி வீதி வழியாக இந்திக்கமுல்ல சந்தி வரை சுமார் 4.4 கிலோ மீற்றர்கள் பயணம் செய்து வலது பக்கமாக வேபொட வீதிக்குத் திரும்பி அதில் தொடர்ந்து 2 கிலோ மீற்றர்கள் சென்று இடது பக்கத்திலிருக்கும் சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- கொள்வனவு முயற்சியில் வெற்றி பெறுபவர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத்தொகையினை ஏல விற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) முடிவுசெய்யப்பட்ட விற்பனை விலையின் பத்து சதவீதம் (10%) ;
(2) விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி ( 90%) வீதமும் யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பி. எல்.சி. தலைமை அலுவலகத்தில் வைப்புச்செய்யப்படல் வேண்டும் ;
(3) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;
(4) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(5) விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு அறவீடுகள் 100% ;
(6) இலிகிதர், முரசறைவோர் கட்டணம் ஆயிரம் ரூபா (1,000 ரூபா) ;
(7) நொத்தாரிசு கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் 2,000 ரூபா.

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியிடம் தொடர்புகொண்டு பெற முடியும் :

சட்டப் பிரிவு, யூனியன் பேங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு 3 ; தொலைபேசி இல. 011-2374100.

திரிவன்கா அன்ட் சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம்,
மேல் மாகாணம்-கொழும்பு மாவட்ட நீதிமன்ற,
அரச மற்றும் வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆம் மாடி,
ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி இல. : 077-3181891.

6-393

---

## நேஷன்ஸ் ட்ரஸ்ற் பேங்க் பீஎல்சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கமுடைய வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவீடு (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் விற்பனை அறிவித்தல்*

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோரளையின் பல்லேபத்துவில் கங்கொடவில நுகேகொடையில் அமைந்துள்ள ஜம்புகஸ்முல்ல 2 ஆவது ஒழுங்கையில் 70/ 2 என்ற மதிப்பீட்டு

இலக்கத்தையுடைய ''ஹெடவககஹவத்த'' எனக் கூறப்படும் காணி சம்பந்தமாக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வீ. ஏ. எல். சேனரத்னவால் தயாரிக்கப்பட்ட 1967.04.21 ஆந் திகதியிடப்பட்ட 3609 ஆம் இலக்க படவரைபுத் திட்டத்தில் காணித்துண்டு 3 எனக் குறித்துக்காட்டப்பட்ட அனைத்தும் பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக் கப்பட்ட காணிப்பகுதி. இது தெல்கந்த காணிப்பதிவு அலுவலகத்தில் தொகுதி/நிரல் M2003/169 இன்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பரப்பளவு : ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 7பே.)

கட்டிடங்கள், பயிர்கள் மற்றும் அதிலுள்ள ஏனைய அனைத்துடனும் சேர்ந்தது.

கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஐ. டி. வீரக்கொடியால் உறுதிசெய்யப்பட்ட 2011, யுன் மாதம் 22 ஆந் திகதியிடப்பட்ட 1865 ஆம் இலக்கமுடைய ஈட்டுமுறிக்கேற்ப உரிய அட்டவணையில் மேலும் கூடுதலாக விபரிக்கப்பட்ட உரிமைகள், ஆதனம் மற்றும் நிலையங்கள் கொழும்பு 2, யூனியன் பிளேஸ், இல. 242 இல் அமைந்துள்ள நேஷன்ஸ் ட்ரஸ்ற் பேங்க் பீஎல்சீ இன் பெயரில் கூறப்பட்ட சிறி இம்போட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்கான ஒரு பிணையாக ஈடுவைக்கப்பட்டு ஒப்படைக்கப் பட்டுள்ளதுடன் கூறப்பட்ட ஈட்முறியில் உறுதியாக்கப்பட்ட வசதிகளுக் கான கொடுப்பனவு தவணை தவறிவிட்டது.

நேஷன்ஸ் ட்ரஸ்ற் வங்கி பீஎல்சீயால் எமக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு ஏற்ப மேற்கூறப்பட்ட ஆதனத்தை அதே இடத்தில் நாம் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யவுள்ளோம்.

ஏல விற்பனை 2015, யூலை மாதம் 2 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

**ஆதனத்தை வந்தடைதல்**.- கொழும்பிலிருந்து புறப்பட்டு நுகேகொடை மேம்பாலம் சந்தி வரை பயணம் செய்து தொடர்ந்து ஹைலெவல் வீதி வழியாக சுமார் 550 மீற்றர்கள் சென்று இடது பக்கமாக இரண்டாவது ஒழுங்கை, ஜம்புகஸ்முல்ல வீதிக்குத் திரும்பி சுமார் 100 மீற்றர்கள் சென்று இடது பக்கமாக அமைந்துள்ள சம்பந்தப்பட்ட ஆதனத்தை வந்தடையலாம். ஜம்புகஸ்முல்ல வீதியிலிருந்து வந்தடைவதற்கான மாற்று வழியும் உண்டு.

**கொடுப்பனவு முறை**.- கொள்வனவு முயற்சியில் வெற்றிபெறுபவர் ஏல விற்பனை முடிந்ததுமே பின்வரும் பணத்தொகையினை ஏல விற்பனையாளரிடம் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து (10%) சதவீதம் ;
(2) ஏல விற்பனையாளர் கட்டணம் இரண்டரை சதவீதம் (2.5%) ;
(3) உள்ளூராட்சி சபைகளுக்கு விற்பனை வரியாக கொள்வனவு விலையின் ஒரு (1%) சதவீதம் செலுத்தப்படல் வேண்டும் ;
(4) விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு அறவீடுகள் ;
(5) இலிகிதர், முரசறைவோர் கூலியாக ரூபா 1,000 ;
(6) நொத்தாரிசு கட்டணம் மற்றும் ஏனைய கட்டணங்கள் ரூபா 2,000.

விற்பனைத் தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் மீதி 90 வீதமும் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ இன் தலைமை அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும் ;

உரித்து உறுதிகள் தொடர்பான மேலதிக தகவல்களை கீழ்க்காணும் அதிகாரியுடன் தொடர்புகொண்டு பெற முடியும் :

சட்டப் பிரிவு, நேஷன் ட்ரஸ்ட் வங்கி பீஎல்சீ, இல. 46/58, நவம் மாவத்தை, கொழும்பு 2, தொலைபேசி இல. 011-4218746.

திரிவன்கா மற்றும் சேனாநாயக்க,
ஏல விற்பனையாளர்கள்,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம்,
கொழும்பு மாவட்ட நீதிமன்றம், அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான நீதிமன்ற
ஆணையாளர்.

இல. 182, 3 ஆம் மாடி,
ஹல்ஸ்ரொப் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. 077-3181891.

6-392

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.